"Peneraju Pendidikan Negara"

# TAKLIMAT DSKP BAHASA TAMIL SJKT TAHUN 5 KEPADA JURULATIH UTAMA (JU)

முதன்மைப் பயிற்றுநருக்கான
தமிழ்மொழித் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணத்தின் விளக்கம்
ஆண்டு 5
(தமிழ்ப்பள்ளி)

# வாசிப்பு

Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

# வாசிப்பு என்பது...?

- வரிவடிவத்தைப் பொருள் பெயர்த்துக் கருத்துணரும் ஒரு முயற்சி.
- எழுத்துகளைக் கண்ணால் கண்டு வாயால் உச்சரித்துப் பொருள் உணர்வது.
- அச்சில் அல்லது எழுத்தில் உள்ளவற்றைப் பொருளாக்கம் செய்வது.

(எழுத்து, எழுத்துகளாலான சொற்கள், சொற்களாலான தொடர்கள், வாக்கியங்கள் மற்றும் வடிவங்கள், குறிவரைவுகள், படங்கள் போன்றவற்றைப் பொருள் பெயர்த்துக் கருத்துணருவது)

# புதிய கலைத்திட்டத்தில் வாசிப்பு

- தமிழ்மொழியை மாணவர்கள் சிறப்பாகக் கையாளுவதற்குப் பேச்சு மொழியும் எழுத்து மொழியும் அவசியம்.

- கேட்டல், பேச்சின் தொடர்ச்சியாக வாசிப்பு இருப்பதாலும் எழுத்து மொழிக்கு அடிப்படையாக வாசிப்பு விளங்குவதாலும் அதைத் தனித்துப் போதிப்பதையே தர அடிப்படையிலான இப்புதிய கலைத்திட்டம் வலியுறுத்துகிறது.

- வாசிப்புப் பழக்கம் இளமையிலேயே அரும்பி வளரவேண்டிய ஒன்று. அதனாலேயே வாசிப்பையும் சிறந்த அணுகுமுறைகளோடு, தனித்துக் கற்பிக்கப் பரிந்துரைக்கப்படுகின்றது.

# தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல்வழி, ஆண்டு ஐந்து இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை

நோக்கம்:-

அ. பல்வேறு துறைசார்ந்த வாசிப்புப் பகுதிகளை வாசித்துப் புரிந்து கொள்ளுதல்; தகவல்களைச் சேகரித்தல்.

ஆ. மேலோட்டமாக வாசித்துத் தகவல்களைச் சேகரித்தல்.

# 2.0 வாசிப்பு

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 2.3 பல்வேறு துறைசார்ந்த வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர். | 2.3.7 அறிவியல் தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.<br><br>2.3.8 சமூகவியல் தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர். |
| 2.5 அருஞ்சொற்களின் பொருளறிந்து வாசிப்பர். | 2.5.3 பல பொருள் தரும் சொற்களை அறிந்து வாசிப்பர். |

# 2.0 வாசிப்பு

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 2.6 பல்வகை எழுத்துப் படிவங்களை வாசித்துப் புரிந்து கொள்வர். | 2.6.15 துணுக்குகளை வாசித்துப் புரிந்து கொள்வர்.<br>2.6.16 குழந்தைப் பாடலை வாசித்துப் புரிந்து கொள்வர்.<br>2.6.17 ஓரங்க நாடகத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.<br>2.6.18 நீதிக் கதையை வாசித்துப் புரிந்து கொள்வர்.<br>2.6.19 கற்பனைக் கட்டுரையை வாசித்துப் புரிந்து கொள்வர். |

# 2.0 வாசிப்பு

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 2.7 பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி வாசிப்பர். | 2.7.1 மேலோட்டமாக வாசித்துத் தகவல்களைப் பெறுவர். |
| 2.8 வாசித்துத் தகவல்களைச் சேகரிப்பர். | 2.8.4 வரைபடத்தில் உள்ள தகவல்களைச் சேகரிப்பர்.<br>2.8.5 அட்டவணையிலுள்ள தகவல்களைச் சேகரிப்பர். |

# உரக்க வாசித்தல் - அணுகுமுறைகள்

- **வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்தலை வலியுறுத்துதல்.**
  - -உச்சரிப்புத் தெளிவு
  - -தொனி ஏற்ற இறக்கம்
  - -பொருத்தமான வேகம்
  - -கருத்துப்புலப்பட வாசித்தல்
- **மாணவர்களின் தரத்திற்கும் திறமைக்கும் ஏற்ற பாடப்பகுதிகளை வழங்குதல்.**
- **வகுப்புமுறை, குழுமுறை, தனியாள் முறைகளில் பின்னொற்றி வாசிக்கச் செய்தல்.**
  - -ஆசிரியர் உரிய முறையில் உச்சரித்து வாசித்துக் காட்ட வேண்டும்.

# உரக்க வாசித்தல்

2.3.7 அறிவியல் தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

2.3.8 சமூகவியல் தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கு ஏற்ப வாசிக்காவிட்டால் ஏற்படும் பொருள் மயக்கத்தையும் தெளிவின்மையையும் மாணவர்களுக்கு உணர்த்துதல் வேண்டும்.

எ.கா:

- லகர, ழகர, ளகர; ரகர. றகர: ணகர, நகர, னகர, குறில் நெடில் எழுத்துகள் கொண்ட சொற்கள்/சொற்றொடர்களை வாசித்தல்.
- பல்வேறு நிறுத்தக்குறிகள் கொண்ட வாசிப்புப் பகுதிகளை வாசித்தல்.
- அறிவியல், சமூகவியல் தொடர்பான துறைசார் சொற்களை/சொற்றொடர்களை அடையாளங்கண்டு வேகமும் தொனியும் சரியாகப் பொருந்த வாசித்தல்.

2.5.3 பல பொருள் தரும் சொற்களை அறிந்து வாசிப்பர்.

எ.கா: பாத்திரம் = ஏனம், கொள்கலன், கதைமாந்தர்,...
ஆழி = கடல், மோதிரம், வட்டம்,...

- பாடப் பகுதிகள் பல பொருள் தரும் சொற்களைக் கொண்டிருக்க வேண்டும்.
- அருஞ்சொற்களைப் புரிந்து கொள்ளவும் ஊகித்து அறியவுமான வாசிப்புப் பகுதிகளை ஆசிரியர் வழங்க வேண்டும்.

# மௌன வாசிப்பு

- **மௌனமாக வாசித்துக் கருத்துணரும் ஆற்றல் வளர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.**

  -தேவைக்கேற்ப மேலோட்டமாகவும் கூர்ந்தும் வாசித்தல்.

  -முழுக்கவனத்தையும் செலுத்தி வாசித்தல்.

  -கிரகித்துப் பொருள் உணர்தல்

  -கருத்துகளை உள்வாங்குதல்.

**வாசித்தவற்றைப் புரிந்து கொண்டு துலங்கும் வகையில் பயிற்சிகளை வழங்க வேண்டும்.**

- **சுவையான பாடப்பகுதிகள், சிந்தனைத் திறனை வளர்க்கும் பனுவல்கள், சொற்றொடர்கள், படங்கள், வரைகலைகள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.**

# மௌன வாசிப்பு

**2.6.15 துணுக்குகளை வாசித்துப் புரிந்து கொள்வர்.**

எ.கா : வலைப்பதிவு/வலைப்பூ, நாளிதழ், வார, மாத இதழ்களில் வெளியிடப்படுபவை.

**2.6.16 குழந்தைப் பாடலை வாசித்துப் புரிந்து கொள்வர்.**

**மாணவர்கள் வாசித்துப் புரிந்து கொண்டு, பொருத்தமான, தெளிவான, முழுமையான விடைகளைக் கூறுதல்/எழுதுதல் வேண்டும்.**

# மௌன வாசிப்பு

**2.7.1 மேலோட்டமாக வாசித்துத் தகவல்களைப் பெறுவர்.**

- மேலோட்ட வாசிப்பு அணுகுமுறையின் வாயிலாக நாம் பாடப்பகுதியை விரைவாக வாசித்துப் பொதுவான கருத்தையும் முக்கியக் கூறுகளையும் திரட்டிக் கொள்ள இயலும்.

- வாசிப்பின்போது ஒவ்வொரு சொல்லையும் வாசிக்கத் தேவையில்லை. முக்கியக் கருவை மட்டுமே தெரிந்து கொண்டால் போதுமானது.

# மௌன வாசிப்பு

**மேலோட்ட வாசிப்பு முறையைக் கையாளும் வழிவகைகள்**

- தலைப்பைக் கவனமாக வாசிக்கவும்.
- ஒவ்வொரு பத்தியின் முதல் வாக்கியத்தை வாசிக்கவும்.
- பத்தியின் இடையிலுள்ள வார்த்தைகளை வாசிக்கவும்.
- இறுதிப் பத்தியைக் கவனமாக வாசிக்கவும். பெரும்பாலும் எழுத்தாளர் இப்பத்தியில் கருத்துகளைச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறியிருப்பார்.

மேலதிக விவரங்களுக்கு:

*** தமிழ்ப்பள்ளிக்கான வாசிப்பு வழிகாட்டி நூலை காண்க.**



Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

# மௌன வாசிப்பு

2.8.4 வரைபடத்தில் உள்ள தகவல்களைச் சேகரிப்பர்.

2.8.5 அட்டவணையிலுள்ள தகவல்களைச் சேகரிப்பர்.

**வாசித்து முக்கியத் தகவல்களை அடையாளங்காணும் நடவடிக்கைகளை வலியுறுத்துதல்.**

- கோடிடுதல்
- வண்ணமிடுதல்
- குறித்து வைத்தல்
- சுருங்கக் கூறுதல்
- சிந்தனை வரிபடக்கருவி, மனவோட்டவரைவு போன்றவற்றைப் பயன்படுத்துதல்
- திரட்டேடு தயாரித்தல்

# கற்றல் நடவடிக்கைகள்

**கற்றல் தரம்:** **2.3.7 அறிவியல் தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்தல்.**

அ. பனுவலைச் சரியான வேகம், தொனியுடன் வாசித்தல்.

ஆ. பனுவலைச் சரியான உச்சரிப்புடன் உரக்க வாசித்தல்.

இ. பனுவலைச் சரியான வேகம், தொனி ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்தல்.

ஈ. பனுவலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்தல்.

# கற்றல் நடவடிக்கைகள்

**கற்றல் தரம்:** 2.6.15 **துணுக்குகளை வாசித்துப் புரிந்து கொள்வர்.**

அ. துணுக்குகளை வாசித்துப் புரிந்து கொண்டு கேள்விகளுக்கு விடையளித்தல்.

ஆ. துணுக்குகளை வாசித்துப் புரிந்து கொண்டு கேள்விகளுக்கு விடையெழுதி வாசித்தல்.

இ. துணுக்குகளை வாசித்துப் புரிந்து கொண்டு முக்கியக் கருத்துகளைப் பட்டியலிடுதல்.

ஈ. துணுக்குகளை வாசித்துப் புரிந்து கொண்டு அது தொடர்பான முக்கியக் கருத்துகளை அடையாளங்காணுதல்; வாசித்தல்.

உ. துணுக்குகள் உணர்த்தும் கருத்துகளைக் கூறுதல்/எழுதி வாசித்தல்.

# மதிப்பீடு

- மாணவர்களின் உச்சரிப்பு, சரளம், தொனி, நிறுத்தம் போன்றவை மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

- வாசித்த பனுவலைப் புரிந்து கொள்ளும் அளவில் கருத்துணர் பயிற்சிகள்வழி மதிப்பீடு செய்தல் வேண்டும்.

# மாதிரி நாள் பாடத்திட்டம்

பாடம் /வகுப்பு : தமிழ்மொழி / ஆண்டு 5
கருப்பொருள் / தலைப்பு: : நன்னெறி
நேரம் : 60 நிமிடம்
கற்றல் தரம் : 2.6.16
நோக்கம் : குழந்தைப் பாடலை வாசித்துப் புரிந்து கொண்டு கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

**கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள்:**

- **குழந்தைப் பாடலை மாணவர்கள் வாசித்தல்.**
- **மாணவர்கள் குழந்தைப் பாடலில் உள்ள முக்கியக் கருத்துகளை அடையாளங்காணுதல்; வாசித்துக் காட்டுதல்.**
- **குழந்தைப் பாடல் தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குச் சரியான விடைகளை எழுதி வாசித்தல்.**
- **நன்னெறிப் பண்புகளை வலியுறுத்தி, பாடத்தை நிறைவுசெய்தல்.**

விரவிவரும் கூறுகள் : நன்னெறி
பயிற்றுத் துணைப்பொருள் : வாசிப்பு அட்டை, நீர்மப்படிக உருகாட்டி

மதிப்பீடு : குழந்தைப் பாடலை வாசித்து முக்கியக் கருத்துகளைப் புரிந்து கொண்டு கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளித்தல்.
சிந்தனை மீட்சி : 1. கற்றல் தரத்தை அடைந்த / அடையாத மாணவர்களின் எண்ணிக்கை.
2. தொடர் நடவடிக்கை

நன்றி, வணக்கம்..!